5. அரசின் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(3) தமிழ்நாடு 1973 ஆம் ஆண்டு, கேளிக்கை வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப்பேரவை சட்ட முன் வடிவு எண் 37/73).

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே,

" சட்டப்பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு 1973-ஆம் ஆண்டு, கேளிக்கைவரி (திருத்த) சட்ட முன்வடிவு @(சட்டப்பேரவை சட்ட முன்வடிவு எண் 37/73) பரிந்துரை செய்வதற்காக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப் படவேண்டும் "

என்று முன் மொழிகிறேன்.

தமிழ்நாடு 1939-ஆம் ஆண்டு கேளிக்கை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1939) 4-எ பிரிவின்கீழ் சென்னை மாநகரம், நகராட்சிகள் போன்ற பல்வேறு இடங்களில் நடைபெறும் திரைப்படக்காட்சிகள்மீது பல்வேறு வீதங்களில் காட்சி வரி விதிக்கப்படத்தக்கதாகும். மதுரை நகராட்சி மாநகராட்சியாகிவிட்டதனால், மதுரை மாநகரில் நடைபெறும் திரைப்படக் காட்சிகள்மீது, சென்னை மாநகரில் நடைபெறும் திரைப்படக் காட்சிகளுக்கு விதிக்கப்படும் வீதத்திலேயே, காட்சி வரி விதிக்கக் கருதப்பட்டுள்ளது. இதற்கு வகை செய்ய, தமிழ்நாடு 1939-ம் ஆண்டு கேளிக்கை வரிச் சட்டத்தைத் திருத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு கேளிக்கை வரிச் சட்டத்தின் தற்போதைய விதித்துறைகளின்கீழ், வரி ஏய்ப்பு அல்லது குறைவான வரி விதிப்பு கண்டுபிடிக்கப் படும் நேர்வுகளில், வரி விதிப்பு அதிகாரி, மேற்படி சட்டத்தின் 7-பி பிரிவின் விதித்துறைகளைப் பயன்படுத்துகையில், ஒவ்வொரு வாரத்திற்கும், வரி விதிப்பு அல்லது மறுவரி விதிப்பிற்காகத் தனித்தனி ஆணைகள் பிறப்பிக்க வேண்டியுள்ளது. ஆனால் ஒரு நிதி ஆண்டு குறித்து அல்லது அதன் ஒரு பகுதி குறித்து ஒரே ஒரு ஆணை பிறப்பிக்க இயலுமாயின், அதனால் வரி விதிப்பு அதிகாரிக்கு, நேரமும் உழைப்பும் ஏராளமாக மிச்ச மாகும். எனவே, மேற்படி சட்டத்தின் 7-பி பிரிவின் விதித்துறைகளைப் பயன்படுத்துகையில், ஒரு நிதி ஆண்டு அல்லது அதன் ஒரு பகுதிக்காக ஒரே ஒரு வரி விதிப்பு ஆணை அல்லது மறு வரி விதிப்பு ஆணையைப் பிறப்பிக்க வகை செய்யக் கருதப்பட்டுள்ளது.

4. ஆவணத்தில் வெளிப்படையாக தெளிவாகத் தெரிகிற தவறு எதையும் சரி செய்ய, தமிழ்நாடு கேளிக்கை வரியின்கீழ் வரி விதிக்க அதிகார முள்ள அதிகாரிக்கோ அல்லது மேல்முறையீட்டு அதிகாரிக்கோ அல்லது மறுவிசாரணை அதிகாரிக்கோ இயலும் வகையில் மேற்படி சட்டத்தில் விதித்துறை எதுவும் இல்லை. எனவே, ஆவணத்தில் வெளிப்படையாகத் தெரிகிற தவறு எதனையும் மூன்று ஆண்டு கால அளவிற்குள் சரிசெய்ய மேற்படி அதிகாரிகளுக்கு இயலும் வகையில் மேற்படி சட்டத்தில் அவசிய மான விதித்துறை செய்யக் கருதப்பட்டுள்ளது.

இம்மேலவை முன் உள்ள சட்டவரைவு, மேலே குறிப்பிட்டுள்ள நோக்கங்களை எய்த விழைகிறது.

@ 52–53 ஆம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.

இப்பிரேரணையை ஏற்று நிறைவேற்றித் தருமாறு இம்மன்றத்தை நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு 1973-ஆம் ஆண்டு, கேளிக்கை வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 37/73) பரிந்துரைகள் செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்படவேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பரிந்துரைகள் செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

(பரிந்துரைகள் எதும் இல்லை.)

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவரவர்களே,

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு 1973-ஆம் ஆண்டு, கேளிக்கை வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 37/73) திருப்பியனுப்பப்பட வேண்டும்." என்று முன் மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு 1973-ஆம் ஆண்டு கேளிக்கை வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 37/73) திருப்பியனுப்பப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: இத்துடன் இன்றைய நிகழ்ச்சிகள் முடிவுற்றன. அவை மீண்டும் திங்கட்கிழமை (3—12—1973) பிற்பகல் 4 மணி அளவில் கூடும்.

6·05 பி.ப. பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

7. அவைமுன் வைக்கப்பட்டுள்ள ஏடுகள்.

A Statutory Rules and Orders.

Nil.

B. Reports, Notifications and other Papers.

*46. The Tamil Nadu Local Authorities Finance (Second Amendment) Bill, 1973 (L. A. Bill No. 33 of 1973) as passed by the Legislative Assembly.